## விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2017

---

பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்த விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 பெப்ரவரி 09 ஆம் திகதிய 909/13 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட 1996 இன் 01 ஆம் இலக்க விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டியின் 21 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு, என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2018 ஜுலை 04 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 99 ஆவது பந்தி பிரகாரம் நிறுவனமொன்றில் பற்றாகுறை அல்லது மிகையினை இனங்காணும் போது அனைத்து வருமானங்களும் செலவுகளும் நிதி செயலாற்றுகை கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட குறுங்கால பாடநெறிகள், செயலமர்வுகள் மற்றும் மாநாடுகள் (PGIS Congress) என்பவற்றிற்காக கிடைத்த ரூபா 8,327,699 ஆன வருமானத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,797,725 ஆன செலவு கழிக்கப்பட்டு தேறிய பெறுமதி நிதி செயலாற்றுகை கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஆண்டினுள் பணமாக கிடைத்த முதலீட்டு வருமானம் ரூபா 20,854,126 ஆன போதும், நிதிப் பாய்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 24,642,620 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) ஆண்டினுள் நிலையான வைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடுகளின் பெறுமதி ரூபா 42,399,320 ஆன போதும், முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 43,504,468 ஆன நிதி வெளிப்பாய்ச்சலாக செம்மையாக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய செலவுகளின் அதிகரிப்பு ரூபா 9,107,490 ஆன போதும், அது ரூபா 2,167,540 ஆக செயற்பாட்டு மூலதன மாற்றத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருந்த பீ அமரசிங்ஹ புலமைப் பரிசில் நிதியத்திற்கு சொந்தமான ரூபா 475,803 ஆன நிலையான வைப்புகள் மற்றும் ரூபா 629,345 ஆன சேமிப்பு வைப்புகள் நிதி உட்பாய்ச்சலாக நிதி செயற்பாடுகளின் கீழ் செம்மையாக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

நியமத்தின் 65 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயனுள்ள ஆயுட் காலம் ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படாமையினால் 04 சொத்து வகுப்புக்களின் கிரயம் ரூபா 44,161,411 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் முழுமையாக தேய்விடப்பட்ட போதும், தொடர்ந்தும் பாவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அதன் மூலமான மதிப்பீட்டு ரீதியான தவறினை நியமம் 03 இன் பிரகாரம் மீள் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிறுவனம் மீளாய்வாண்டினுள் 25 குறுங்கால பாடநெறிகளை நடாத்தி ரூபா 5,372,874 ஆன வருமானத்தை ஈட்டியிருந்தது. எனினும் குறுங்கால பாடநெறிகளுக்கான வருமானத்தை, கணக்குப் பதிவிடும் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆண்டிற்குறிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 21,453,924 ஆன போதும், அது ரூபா 23,285,697 ஆக குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 1,831,773 இனால் கூட்டி கணக்குப் பதியப்படடிருந்தது.

(ஆ) 2007 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலத்தினுள் 13 நிலையான வைப்பு சான்றிதழ்களை இரத்துச் செய்து பெறப்பட்ட பணம் நிறுவன நிதியத்திற்கு செலவு வைக்காது மேற்கொள்ளப்பட்ட ரூபா 74,663,525 ஆன நிதி மோசடி இனங்காணப்பட்டு ஓராண்டிற்கும் விஞ்சிய காலம் கடந்த போதும், மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் அதற்குறிய செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இருபதாம் நூற்றாண்டிற்காக உயர் கல்வி (HETC) கருத்திட்டத்தின் மூலம் அடுத்த ஆண்டு வரை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 7,101,453 ஆன கணனி மற்றும் ஏனைய உபகரணங்களை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழ் குறிப்பிடப்படும் ஒவ்வொரு கணக்கு விடயங்களின் முன்னாலும் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணத்தால் கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்யவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாமல் இருந்தது.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | சொததுக்கள், இயந்திரங்களும் உபகரணங்களும் | 94,383,830 | நிலையான சொத்துப்பதிவேடு |
| (ஆ) | கொள்கை மாற்றுகை மூலம் செய்யப்பட்ட செம்மையாக்கல் | 129,646,278 | பட்டியல்கள் |
| (இ) | பாடநெறி கட்டண வருமானம் | 59,739,331 | உறுதிசெய்து கொள்ளும் பதிவேடு |
| (ஈ) | 04 குறுங்கால பாடநெறிகளின் செலவுகள் | 1,123,232 | வரவுப்பதிவேடு, செலவுவிபரம், மதிப்பீட்டறிக்கை |
| | | 284,892,671 | |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெளி நிறுவனங்களுக்கு வாடகைக்காக வாகனங்களை வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 20,473 ஆன ஒர் வாகன வாடகை வருமானம் ஓராண்டை விஞ்சிய காலம் கடந்திருந்த போதும், அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) குறுங்கால பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 6,413,381 ஆன பணம் பாடநெறி முடிவடைந்து 05 முதல் 28 மாதகாலம் கடந்த போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடன் இணங்காமை.

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1958 இலக்கம் 15 கொண்ட ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 திகதிய இலக்கம் பிர/ஆயதன/11 மேலும் 2015 செப்தம்பர் 12 திகதிய இலக்கம் கம்.தே/ரவி/15/2015 கொண்ட தொழில் ஆணையாளரின் கடிதங்கள் | ஊழியர் சேமலாப நிதிய, ஓய்வதிய நிதிய மற்றும் தொழில் வழங்குனர் பொறுப்பு நிதிய பங்களிப்புகளை கணக்கிடுகையில் கல்விப்படியினை கருத்திற் கொள்ளக் கூடாத போதும், நிறுவன கல்விசார் ஆளணி தொடர்பில் கல்விப்படி உள்ளடக்கப்பட்டு மேற் குறித்த நிதியங்களுக்கு பங்களிப்பு கணக்கிடப்பட்டதன் காரணமாக ரூபா 703,233 ஆன பணம் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 751 | நிறுவனத்தினால் 2013 முதல் 2017 ஆண்டு வரையான காலத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட 09 ஆராய்ச்சிக் கருத்திட்டங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,977,361 பெறுமதியான உபகரணங்கள் நிறுவன பொருட் பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டு டிசம்பர் 31 திகதி நிலவிய ரூபா 1,833,829 ஆன செம்மையாக்கற் கணக்கு வரவு மீதி, அனுமதியின்றி பொது ஒதுக்கத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 ஜூன் 02 திகதிய இலக்கம் PED/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் குறிப்பிடப்படும் நல்லாட்சிக்கான கையேட்டின் 8.2.2 பந்தி பிரகாரம், எல்லா மேலதிக பணங்கள் நிதி அமைச்சரின் முன்கூட்டிய அனுமதியுடனேயே நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், குறுங்கால வைப்புக்கள் அல்லது வேறு பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் நிறுவனம் முதலீடு செய்திருந்த ரூபா 20,000,000 ஆன முதலீடுகளிற்காக முகாமை சபையின் மற்றும் நிதி அமைச்சரின் அனுமதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3 நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதி விளைவுகள் ரூபா 39,552,311 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 17,917,356 ஆனதனால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 21,634,955 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வருமானம் ரூபா 6,427,905 இனால் மற்றும் பாடநெறிக் கட்டணம் ரூபா 2,023,379 ஆல் அதிகரித்தமை மற்றும் ஊழியர் ஊதியம் ரூபா 7,453,520 ஆல் குறைந்தமை மேற்படி வளர்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையிலும் நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வினை மீண்டும் செம்மையாக்கையில் 2013 ஆம் ஆண்டின் ரூபா 52,227,660 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 97,012,649 ஆக இருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 செயலாற்றுகை மற்றும் மீளாய்வு

நிறுவகத்தில் நடைமுறையிலுள்ள 21 பாடநெறிகளிற்காக 2011 முதல் 2016 ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட 1,727 மாணவர்களில் 957 மாணவர்கள் அதாவது பதிவு செய்யப்பட்ட மாணவர்களில் 55 சதவீதத்தினர் பாடநெறியினை பூர்த்தி செய்திருக்கவில்லை. பாடநெறியினை வெவ்வேறாக நோக்குகையில் பூர்த்தி செய்த மாணவர்களின் 11 முதல் 100 வீதம் வரையான விலகல்கள் நிலவியதுடன், இதில் 04 பாடநெறியினை எந்தவொறு மாணவரும் பூர்த்தி செய்திருக்கவில்லை. பூர்தி செய்ய வேண்டிய காலமும் 01 முதல் 05 ஆண்டுகள் வரை கடந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

2007 முதல் 2017 ஆண்டு வரையான காலத்தினுள் நிறுவனத்திற்கு சொந்தமான 13 நிலையான வைப்புச் சான்றிதழ்களை இரத்துச் செய்து நிறுவனத்தின் சிரேஷ்ட அலுவலர் ஒருவரினால் பணம் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு ஓராண்டை விஞ்சிய காலம் கடந்திருந்த போதும், அது தொடர்பில் நிதிப் பிரமாணம் 104 படி எடுக்கப்பட வேண்டிய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சிகள் தொடர்பான வருமானம் மற்றும் செலவுகள் பற்றிய தகவல்களின் பிரகாரம் 2017 டிசம்பர் 31 அன்று 34 கருத்திட்டங்களின் ஆராய்ச்சி மானிய மீதி ரூபா 23,972,571 ஆனதுடன் ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் தொடர்பான பூரண விபரங்கள் நிறுவனத்தினால் பேணப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 நிதிக் குறைப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில்எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறாத 14 ஆராய்ச்சி கருத்திட்டங்களில் 2017 திசெம்பர் 31 திகதியன்று பண மீதி ரூபா 8,726,012 ஆனது.

(ஆ) நிறுவனம் குறுங்கால பாடநெறிகள் நடாத்தி கிடைக்கும் வருமானத்தில் 5 சதவீதத்தினை குறித்த பாடநெறிகளை நடாத்தும் கலிவிசார் ஆளணியினரின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்குகின்ற போதும், மீளாய்வாண்டு இறுதிவரை ஒதுக்கப்பட்ட ரூபா 790,177 ஆன தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.5 பயனற்ற மற்றும் குறைபயன்பாட்டுத் சொத்துக்கள்

நிறுவனம் கொள்வனவு செய்த ரூபா 110,524 பெறுமதியான அலுவலக உபகரணங்களுக்கு பயன்படுத்தும் 9 டோனர்கள் 2 வருடத்திக்கும் விஞ்சிய காலம் பயன்படுத்தாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

நீண்ட காலமாக நிலவிய நிறுவன அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் 4 பதவிகளில் 05 வெற்றிடங்கள் தொடர்பாக 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பிரிவிற்கு இணங்க நடடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்ளல்

2017 ஆகஸ்ட் 14 திகதிய இலக்கம் NP/SP/SDG/17 கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சிநிரல்’’ பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கு/ ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

#### 6.1.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 பெறுகை வழிகாட்டி கோவையின் 4.2.1(அ) பந்தி பிரகாரம் குறைந்த பட்சம் 03 வருட கால எல்லைக்குள் மேற்கொள்ள எதிர்பார்க்கும் பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கிய பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டம் பெறுகை கைநூலின் 4.2.1 பந்தியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகை திட்டம் பிரகாரம் மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 64.57 மில்லியன் ஆன போதும், ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகை நடவடிக்கையின் பெறுமதி ரூபா 30.25 மில்லியன் ஆனது. அதன் படி பெறுகை திட்டத்திற்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட வருமானங்களையும் செலவினங்களையும் உள்ளபடியான வருமானங்களுடனும் செலவினங்களுடனும் ஒப்பீடு செய்தபோது 41 விடயங்களில் 22 சதவீதம் முதல் 102 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | i சில இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படாமை.<br>ii செலவுகள் சரியாக இணங்காணப்பட்டு கணக்குகளில் பதிவிடாமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | மானியங்கள் கணக்குகளில் பதிவிடாமை. |
| (இ) | ஆராய்ச்சி மற்றும் மானியங்கள் | நிறுவன குறிக்கோள்களை அடையக்கூடிய வகையில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படாமை. |
| (ஈ) | பெறுகை | பெறுகை வழிகாட்டி கோவையிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாமை. |